# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | கிறிஸ்தவம் I & II<br>Christianity I & II | நேரம் :-3மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடம் |
| சுட்டெண்:............................... | 15 \| T I&II | |

கவனிக்க:

- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1) இயேசு என்னும் பெயரின் பொருள்.
   1. கடவுள் நம்முடன் இருக்கிறார்.
   2. அருட்பொழிவு பெற்றவர்
   3. கடவுள் விடுவிக்கிறார்.
   4. இறைவனின் கொடை.

2) “ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்” என்று கூறிய இறைவாக்கினர்.
   1. ஏசாயா 2. மீகா
   3. மலாக்கி 4. சிமியோன்

3) A - தாழ்மையும் நம்பிக்கையும் கொண்டவர்.
   B - தூய ஆவியால் நிறைந்தவர்.
   C - மரிப்பதற்கு முன்னர் மெசியாவைக் காண்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தவர்.
   இக்கூற்றுக்களுடன் தொடர்புடையவர்.
   1. திருமுழுக்கு யோவான் 2. சிமியோன்
   3. பவுல் 4. ஸ்தேவான்

4) “ஓய்வு நாளில் செய்யக் கூடாதவைகளை நீங்கள் செய்வதேன்?” என இயேசுவிடம் குற்றம் சுமத்தியவர்கள்.
   1. பரிசேயர், சதுசேயர் 2. மறைநூல் அறிஞர், பரிசேயர்
   3. மக்கள் கூட்டத்தினர் 4. யோவானின் சீடர்கள்

5) மறைநூல் அறிஞர்களால் எழுதப்பட்ட எழுத்து நீதிச் சட்டத்தைப் பின்பற்றியவர்கள்.
   1. சதுசேயர் 2. பரிசேயர்
   3. மறைநூல் அறிஞர்கள் 4. சீடர்கள்

6) இன்றைய சமூகத்திற்கு திருமுழுக்கு யோவானின் அறிவுரையாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாவது

1. சுயநலமற்றவா்களாக தம்மிடமுள்ளதை பிறருடன் பகிர்தல்.
2. கொள்ளை இலாபம் தேடாது நீதி நியாயத்துடன் பணியாற்றுவது.
3. இளைஞர்களிடம் தொலைத்தொடர்புச்சாதனங்களைப்பற்றிய நன்மை தீமைகளைப் போதிப்பது.
4. தவறுகள் காணப்படும்போது அவற்றைச்சரிபார்த்து சீரமைப்பது.

7) இதோ என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்குமுன் சென்றுவழியைஆயத்தம் செய்வார்...” இவ்வாறுமலாக்கி இறைவாக்கினர் யாரைப் பற்றிமுன்னுரைத்தார்?

1. இயேசுகிறிஸ்து 2. திருமுழுக்குயோவான் 3. பவுல் 4. தாவீது

8) பாஸ்கா விழாவை யூதர்கள் கொண்டாடுவதற்கு காரணம்,

1. இயேசுவின் உயிர்ப்பைநினைவு கூறுவதற்கு
2. மெசியாவின் வருகையைநினைவு கூறல்
3. கடவுளுக்குபலிகளைசெலுத்த
4. எதிப்தியஅடிமைவாழ்விலிருந்துமீட்டமையைநினைவு கூறுல்

9) வானதூதர் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றியகருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள்

1. பரிசேயர் 2. மறைநூல் அறிஞர் 3. சதுசேயர் 4. அரசர்கள்

10) இயேசுவானவரின் கெத்சமனேசெபத்தைமுன்மாதிரியாகக் கொள்ளும் நீர்,

1. ஆன்மீகபிரச்சினைக்குமுகங்கொடுக்கவேண்டியிருக்கும்
2. எதிரிகளுக்காகவேண்டுதல் செய்யவேண்டும்
3. மக்களுக்குசமாதானத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்
4. சுயநலம் விடுத்து இறைசித்தத்திற்கு இடமளிக்கவேண்டும்

11) ஓய்வுநாளில் இயேசுவால் சுகம்பெற்றோருள் அடங்காதவா்

1. திமிர்வாதக்காரன் 2. நீர்க்கோவை நோயாளி
3. சூம்பின கையையுடையவா் 4. 18 வருட கூனிப்பெண்

12) பேறுபெற்றோர் என இயேசு குறிப்பிட்டது.

1. செல்வந்தர்கள் 2. ஏழைகள்
3. உண்டு கொழுத்திருப்போர் 4. சிரித்து இன்புறுவோர்

13) இயேசுவின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்த செபதேயுவின் குமாரர்கள்

1. அந்திரேயா யோவான். 2. பேதுரு யோவான்.
3. யாக்கோபு யோவான். 4. பேதுரு அந்திரேயா.

14) இயேசு யூத சமுகத்திற்கு வழங்கிய புதிய எண்ணக்கரு,

1. ஒதுக்கப்பட்டவர்களுக்கு புது விடியலை கொண்டுவந்தது.
2. ஏற்றுக்கொள்ளமுடியாதவைகளாக இருந்தது
3. யூத அதிகாரிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது
4. இறைகட்டளைக்கு முரணானது

15) “மெசியா”என்பதன் பொருள்

1. அருட்பொழிவுபெற்றவர் 2. கடவுள் நம்முடன் இருக்கிறார்

2. யாவேமீட்பராயிருக்கிறார் 4. ஆண்டவரின் கொடை

16) இயேசுவின் சேவகத்தன்மையைக் குறித்து எத்தியோப்பிய அமைச்சருக்கு பிலிப்பு விளக்கியதை குறிக்கும் திருவிவிலியப்பகுதி

1. ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேலுள்ளது.
2. மெய்யாகவே அவா் தம் பிணிகளைத் தாங்கிக்கொண்டாா்.
3. அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும்.......அவா் தம் வாயைத்திறக்கவில்லை.
4. அவா் உலகில் நீதியை நிலைநாட்டும்வரை சோா்வடையாா்.

17) விருத்தசேதனம் எனும் அடையாளத்தின் மூலம் வெளிப்படுவது

1. யூதர்கள் பின்பற்றிய ஓர் முறைமை
2. யூதர்கள் கடவுளுடன் நித்தியமாக இணைக்கப்பட்டவர்கள்
3. யூதர்கள் ஏனையோரிலிருந்து பிரிக்கப்பட்டவர்கள்
4. யூதர்களின் ஓர் அடையாளம்

18) எருசலேம் கோவிலில் இயேசுவை மெசியாவாக இனம் கண்டுகொண்டவர்கள்

1. எலிசபெத்,சகரியா 2. யோசேப்பு,மரியாள்

3. சிமியோன்,அன்னா 4. மார்த்தாள்,லாசரு

19) “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பதுஉங்களுக்குத் தெரியாதா? ”என்றவினாவில் வெளிப்படும் கருத்துஅல்லாதது

1. கடவுளை இயேசு தனது பிதாவாக ஏற்றுக் கொண்டிருந்தார்
2. இயேசு தன்னைப்பற்றியும் சரிவரஅறிந்திருந்தார்
3. தாய்,தந்தையோடு நெருங்கிய உறவை கொண்டிருக்கவில்லை
4. கோவிலில் கடவுளை வழிபடுவதற்கு தரித்திருக்க வேண்டும்

20) தண்ணீரும் ஆவியும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுவது
1. கழுவப்படுதலும் தூய்மையாக்கலும்
2. பரிசுத்தமும் நெருப்பும்
3. புதுப்பித்தலும் தூய்மையாக்கலும்
4. நீதியும் சமாதானமும்

21. உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்த எலியாவின் ஆவியும் பலமும் உடையவராயிருந்தவர்?
1. இயேசுக்கிறிஸ்து 2. திருமுழுக்கு யோவான் 3. ஏலிசா 4. யோசேப்பு

22) இறைவாக்கினர் அன்னா பற்றிய சரியான கூற்றுக்களாக அமைவது
A - திருக்கோயிலில் எப்போதும் மன்றாடிக்கொண்டிருந்தார்.
B - தாழ்மையும் நம்பிக்கையும் நிறைந்தவர்.
C - தூய ஆவியால் நிறைந்தவர்.
D - நோன்பு நோற்றல் மூலம் கடவுளுடன் தொடர்புகொண்டிருந்தவர்.

1. Aயும் Bயும் 2. Aயும் Cயும் 3. Aயும் Dயும் 4. Bயும் Cயும்

23) சனகரிம் என அழைக்கப்பட்ட நீதிமன்றத்தில் இயேசுவிற்கு எதிராக யூதர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளுள் பிழையான குற்றச்சாட்டு
1. மக்களைத் தூண்டுபவர்
2. பேரரசுக்கு வரிசெலுத்துவதை தடுப்பவர்
3. புதுமைகள் செய்து தானே மேன்மை மிக்கவர் என காட்டுபவர்
4. தன்னை கிறிஸ்து எனும் அரசர் எனக்கூறுபவர்.

24) இயேசுவானவரின் வெற்றிகரமான எருசலேம் பயணத்தை முன்னுதாரணமாகக் கொள்ளும் ஒரு கிறிஸ்தவன்.
1. தாழ்மையாக மட்டும் செயற்பட வேண்டும்
2. சமாதானத்தோடும் சகோதரத்துவத்தோடும் செயற்பட வேண்டும்.
3. தெருக்களில் வெற்றிப்பேரொளி எழுப்ப வேண்டும்
4. வெற்றிவாகையுடன் செயற்படவேண்டும்

25) “இம்மானுவேல்” என்பதன் பொருள்,
1. “அருட்பொழிவுபெற்றவர்” 3. “கடவுள் நம்முடன் இருக்கின்றார்”
2. “கடவுள் விடுவிக்கிறார்” 4. “கடவுள் சர்வவல்லமைஉடையவர்”

26) காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்,சாவின் நிழல் சூழ்ந்துள்ளநாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது”எனக் கூறிய இறைவாக்கினர்,

1. “எரோமியா” 2. “ஏசாயா” 3. “மீகா” 4. “எசேக்கியேல்”

27) நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன் நீ மனந்திரும்பி குணப்பட்ட பின்பு உன் சகோதரரை உறுதிப்படுத்து என்று யாரிடம் இயேசு கூறினார்?
1. யோவான் 2. சீமோன் பேதுரு 3. .பவுல் 4. கள்வர்களில் ஒருவன்

28) திருமுழுக்கு யோவான் “..................................”என்று இயேசுவை தமது சீடர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

1. வரப்போகும் மெசியா 2. உலகின் பாவத்தைபோக்கும் ஆட்டுக்குட்டி

3. சமாதானப் பிரபு 4. மேற்கூறிய மூன்றும் பிழை

29. இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களில் ஒருவரின் வேண்டுகோளாக அமைந்தது?

1. நீ யூதர்களின் அரசனானால் உன்னைக்காப்பாற்றிக் கொள்
2. நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்
3. நீ மனம் திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து
4. நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற்கொள்ளும்

30. நீ யூதர்களின் அரசனானால் உன்னைக்காப்பாற்றிக் கொள் என இயேசுவைப் பார்த்துக் கூறியவர்?

1.பரிசேயர் 2.படைவீரர் 3.கள்வர்களில் ஒருவன் 4.பரபாஸ்

31. இயேசு எழுபது பேரை ஊழியத்திற்கு அனுப்புகையில் வழங்கிய அறிவுரைகளுள் அடங்காதது?
1. ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன்
2. வேலையாட்களை அனுப்பும்படி மன்றாடுதல்
3. இறையாட்சி நெருங்கிவிட்டதென அறிவித்தல்
4. கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப்பார்ப்பவரெவரும் இறையாட்சிக்கு உட்பட தகுதியுள்ளவர்களல்ல

32. அவரது பிறப்பால் பலர் மகிழ்ச்சியடைவர் "இங்கு குறிப்பிடப்படுவது"
1. மோசேயின் பிறப்புப்பற்றியதாகும் 2. இயேசுவின் பிறப்புப்பற்றியதாகும்
3. சாமுவேலின் பிறப்புப்பற்றியதாகும் 4. திருமுழுக்கு யோவானின் பிறப்புப்பற்றியதாகும்

33. திருமுழுக்கு யோவானின் செய்தியின் பிரதான விடயம்
1.நியாயத்தீர்ப்பு 2.சமூகப்பொருளாதாரப் பிரச்சனை
3.இறையரசின் அடையாளம் 4.மனம்திரும்புதலுக்கு ஏற்ற கனிகள்

34. திருத்தூதர் என்பதன் பொருள்
1. பிரித்தெடுக்கப்பட்டவர்கள்
2. ஆயத்தப்படுத்தப்பட்டவர்கள்
3 சிறப்பான பணிக்காக பயிற்றப்பட்டு அனுப்பப்பட்வர்கள்
4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

35. யூதனாகிய தானும் யூதர்களால் நிராகரிக்கப்பட்ட இறைவாக்கினரென்பதை அறியச்செய்வதற்காக இயேசு சுட்டிக்காட்டிய இரு முது மொழிகளும்

அ.- மருத்துவரே உம்மையே நீர் குணமாக்கிக்கொள்ளும்
ஆ- .நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்
இ-. இறைவாக்கினரெவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை
ஈ-. கடவுள் மட்டுமன்றி பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்
1.அ, ஆ 2.அ ,இ 3.ஆ ,இ 4.ஆ ,ஈ

36. நாசரேத்து ஜெபக்கூடத்தில் இயேசுவால் புகழப்பட்ட இரு புறவினத்தவர்களும்

1.எலியா-எலிசா 2.நாகமான்-எலிசா
3.நாகமான்-சாரிபாத் விதவை 4. சாரிபாத் விதவை-எலியா

37. நான் என் தந்கையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்பது உங்களுக்கு தெரியாதா என்பதிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டல்?

1. எப்போதும் ஆலயத்தில் தங்கியிருந்து ஆலயப்பணிகளில் ஈடுபட வேண்டும்
2. இறையரசின் செயற்பாட்டை புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும்
3. பெரியவர்களின் அறிவை சோதித்துப்பார்க்க முயற்சிக்க வேண்டும்
4. பெற்றோரின் பார்வையிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

38. தனது பணியை ஆரம்பிக்கும் முன் பாலை நிலத்தில் எளிமையான வாழ்வை வாழ்ந்தவர்

1.திருமுழுக்கு யோவான் 2.இயேசு 3.சகரியா 4.எலியா

39. தீர்க்கதரிசிகளில் முதன்மையானவராகவும் நியாயப்பிரமாணத்தின் முதன்மையானவராகவும் அடையாளப்படுத்தப்பட்டவர்கள்

1.எலியா, மோசே 2.மோசே, யோசுவா 3.எலியா, ஆரோன் 4. மோசே, ஆமோஸ்

40. இயேசுவின் உடலை மரியாதையோடு கல்லறையில் அடக்கம் செய்வதற்கு தைரியத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு இயேசுவை பின்பற்றுபவராகக் காட்டி உண்மைக்குச சான்று பகிர்ந்தவர்.

1. அரிமத்தியா யோசேப்பு
2. மகதலேனா மரியா
3 யோவான்
3. இயேசுவின் தாய் மரியா

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை கருக.**

01)

1.“இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்தார்” இக்கூற்று எந்த இறைவாக்கினரால் யாரைக் குறித்துக் கூறப்பட்டது?

2.குழந்தை இயேசுவுக்காக மரியாவினால் செலுத்தப்பட்ட மீட்புத் தொகையும் காணிக்கையும் என்ன?

3.இயேசுவுக்கு எதிராக ஆளுநர் பிலாத்துவிற்கு முன்னால் யூதர்களினால் சாட்டப்பட்ட குற்றங்கள் இரண்டு தருக?

4.இயேசுவால் அப்பம் பிட்குதல் எனும் செயற்பாட்டில் இடம்பெற்ற முக்கியத்துவங்களில் இரண்டைக் குறிப்பிடுக.

5.சதுசேயர் இயேசுவிடம் வினாவிய இரண்டு வினாக்களைக் குறிப்பிடுக.

6.இயேசுவின் தோற்றம் மாறும் நிகழ்வில் இயேசுவின் இரு பக்கங்களிலும் தோன்றியவர்கள் யார்? எதைக் குறித்து இயேசுவிடம் உரையாடினர் எனக் குறிப்பிடுக.

7.நாசரேத் தொழுகைக் கூடத்தில் யூதனாகிய தானும் யூதர்களால் நிராகரிக்கப்பட்ட இறைவாக்கினர் என்பதை அறியச் செய்ய இயேசுவானவர் கூறிய இரு வரலாற்று சம்பவங்களும் எவை?

8.நாசரேத்து அறிக்கையில் இயேசுவின் விடுதலை கிடைக்குமென குறிப்பிடப்பட்ட 4 வகையினரும் யார்?

9. பன்னிரு சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகள் 2 தருக?

10. நீண்ட காலமாக நலமடையாது இருந்ததால் சமுகத்திலிருந்து புறந்தள்ளப்பட்ட 2 பெண்களும் யாா:?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02)

(1) திருமுழுக்கு யோவானின் பிறப்பைக் குறித்து இறைவாக்குரைத்த இறைவாக்கினர்கள் இருவரைக் குறிப்பிடுக.

(2) திருமுழுக்கு யோவான் அறிவுரை கொடுத்த மூன்று மக்கட் பிரிவினரையும் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்த அறிவுரைகளையும் குறிப்பிடுக.

(3) இலங்கையில் மக்கள் முகங்கொடுக்கும் ஒடுக்கு முறைகள் நான்கைக் குறிப்பிட்டு அவ்வாறான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவரின் பிரதிச்செயல் எவ்வாறு இருக்க வேண்டுமென விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03)

(1) கோவிலின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்ததில் வெளிப்படும் கருத்து யாது?

(2) இயேசுவின் துன்பங்களோடு தொடர்புபட்டவர்கள் மூவரைக் குறிப்பிட்டு அவர்கள் காண்பித்த பிரதி நடத்தைகளைக் குறிப்பிடுக.

(3) இன்றைய சமுதாயத்தில் வாழ்வதற்கு கிறிஸ்துவைப் பின்பற்றும் எங்களிடம் எதிர்பார்க்கப்படும் விடயங்கள் ஐந்து தருக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04)

(1) ஓய்வு நாளில் செய்யக்கூடாதவைகளை நீங்கள் செய்வது ஏன் என இயேசுவிடம் கேட்டவர்கள் யார்?

(2) அவர்களுக்கு அவர் கூறிய பதில் யாது?

(3) இச்சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05)

(1) யூதர்கள் எதிர்பார்த்த மெசியாவின் வருகை எப்போது நிறைவேறியது?

(2) இயேசு பிறந்தகாலகட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த மூவரைக் குறிப்பிடுக?

(3) மேற்குறிப்பிட்ட இன்னல்களை இயேசு நீக்கிய சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06)

(1) இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடனையும் அழைக்கப்பட்ட இடத்தினையும் குறிப்பிடுக?

(2) பன்னிரு சீடர்களை பணிக்காக அனுப்பியபோது கொடுக்கப்பட்ட அறிவுரைகள் மூன்றைக் குறிப்பிடுக?

(3) வாழ்க்கையில் வழி தவறிப்போன உமது நண்பர் ஒருவரை நல்வழிபடுத்துவதற்கு உங்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஐந்தினைக் குறிப்பிடுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**07)** விரும்பிய இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1) சீடர்களின் அழைப்பு
2) நாசரேத்து அறிக்கை
3) சதுசேயர்
4) திருமுழுக்கு யோவான்

(2x5 = 10 புள்ளிகள்)